**செய்தி வெளியீடு–479** நாள்–**28.7.2007**

**<u>முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்று</u>**
**<u>ஆகஸ்டு 3 முதல் சென்னைக்கு கிருஷ்ணா நீர் திறப்பு</u>**

**<u>ஆந்திர முதலமைச்சர் கடிதம்</u>**

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைக்காக, கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து ஆகஸ்டு முதல் வாரத்தில் தண்ணீரைத் திறந்துவிட அறிவுரைகள் வழங்குமாறு ஆந்திர முதலமைச்சர் டாக்டர் ஒய்.எஸ். ராஜசேகரரெட்டி அவர்களுக்கு 20.7.2007 அன்று கடிதம் எழுதி இருந்தார்.**

**முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இக்கோரிக்கையை உடனடியாக ஏற்று, ஆந்திர மாநில முதலமைச்சர் டாக்டர் ஒய்.எஸ். ராஜசேகரரெட்டி அவர்கள் தமிழக அரசுக்கு எழுதியுள்ள கடித்தில், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்காகக் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 3.8.2007 முதல் தண்ணீர் திறந்துவிடுவதற்குத் தெலுங்கு கங்கைத் திட்டத்தின் தலைமைப் பொறியாளருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.**

***

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.